# சென்னை மாநகர கன்னட சைனீகர் சமூக சங்கம்

பதிவு எண்.154/2003

எண்.50, வால்டாக்ஸ் ரோடு. சென்னை-600 079.

செல் : 94446 53643


## திருமணம்

### நிகழ்ச்சியில் சபையோர்கள் மேற்கொள்ள வேண்டியவைகள் :

1. பெரியோர்கள் சபை கூடி சம்பந்தப்பட்ட தலைவர்கள் மற்றும் திருமணத் தொடர்பு கொள்ளும் இரண்டு குடும்பத்தாரையும் இருவர் கேட்டுக் கொள்ளுதல்.

2. இருவருக்கும் சந்தனம், வெற்றிலை, பாக்கு கொடுக்க வேண்டும்.

3. சபையில் பெரப்பங் கூடையில் (அல்லது) தாம்பூளம் 5 தேங்காய், 3 சீப் வாழைப்பழம், வெற்றிலை 1 கவுளி, பாக்கு 1 பாக்கெட், மஞ்சள் தூள், மஞ்சள், குங்குமம், சந்தனம், பூ 5 முழம், வைத்திருக்க வேண்டும்.

4. <u>திரவு கட்டுதல் :</u> முக்காலியில் சிறிய தாம்பாளம் வைத்து அதில் கைக்குட்டை அளவில் வெள்ளைத் துணியில் மஞ்சள் நனைத்து வைத்து அதில் 1/4 டம்ளர் பால் ஊற்றி மஞ்சள் கலந்த அரிசி போட்டு, பூ போட்டு, 1 ரூபாய் நாணயம் வைத்து அதை சுற்றிக் கட்டி (கெட்டி மேளத்துடன்) மூன்று முடிச்சு தலைவர் அவர்கள் போட வேண்டும். அதை பெண்ணின் தாயாரிடம் கொடுக்க வேண்டும். (அதை பெண்ணின் தாயார் எடுத்து வைத்து குலதெய்வத்திற்கு அல்லது விரும்பிய தெய்வங்களுக்கு காணிக்கையாக செலுத்த வேண்டும்).

5. <u>சம்பந்தி மரியாதை :</u> பெண்ணின் தகப்பனாரும், மாப்பிள்ளையின் தகப்பனாரும் வார ஆலையை பார்த்து உட்கார வைத்து சந்தனம் கொடுத்து கழுத்தில் மாலை போட்டு வெற்றிலை பாக்கு கொடுக்க வேண்டும்.

6. புரோகிதரை அழைத்து தலைவர் தட்சணை வைத்து திருமணத்தை ஆரம்பிக்க சொல்லுதல்.

7. சபையில் உள்ளவர்களுக்கு தலைவர் உள்பட சந்தனம் வெற்றிலை பாக்கு கொடுக்க வேண்டும்.

### நிகழ்ச்சியில் புரோகிதர் மேற்கொள்ள வேண்டியவைகள் :

1. கணபதி ஹோமம் புரோகிதர் செய்தபின் அரசாணைக்கால் நடுதல் (6அடி உள்ள ஒதியம் காலுக்கு மட்டும் 5 பெண்கள் சேர்ந்து மஞ்சள் துடைத்து பொட்டு வைத்து சிகப்பு துண்டு, மாவிலை பூ சேர்த்து அரசாணைக்காலில் கட்டி துணைக்காலுடன் நட வேண்டும்.)

2. மணமக்கள் மணமேடைக்கு வந்து அமர்தல்.

3. நலுங்கு வைத்தல்.
(2அடி உள்ள மூங்கில் குச்சியில் ஒரு மாவிலையை கட்டி நல்லெண்ணை மற்றும் திரவியதூள், சீயக்காய் தூள் தனிதனியாக நனைத்து 5 பெண்களும் சேர்ந்து பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கு நலுங்கு வைக்க வேண்டும்).

4. தாய் வீட்டுச் சேலை கொடுத்து அனுப்புதல்.

5. தாய்வீட்டு சேலை அணிந்து வந்த பெண்ணையும், மாப்பிள்ளையையும் மணமேடையில் உட்கார வைத்து மாலை மாற்ற வேண்டும். சீகா மாலை அணிவித்தல்.

6. மணமக்களுக்கு கங்கணம் கட்டுதல் உடன் (கெட்டி மேளம்) திருஷ்டிக் கருப்புகயிறு கட்டுதல்.

7. பெரியோர்களால் சீக்கா மாலை மாற்றி ஆசிர்வதித்தல்.

8. புரோகிதர் மணமக்களுக்கு திருமண உடை, மாலை கொடுத்து அனுப்புதல் (சபையோர்களிடம் ஆசிபெற்ற பின்).

9. மணமேடையில் சம்பந்திகள் பூணூல் அணிந்து விநாயகர் பூஜை செய்ய வேண்டும்.

10. பக்கத்திற்கு ஒன்றாக நான்கு சிறிய பானை வைத்து தண்ணீர் விட்டு சுற்றி நூல் கட்டுதல் 2பெரிய பானைகள் அதற்குரிய கும்ப மூடிகளுடன் வைத்தல்.

11. பாலிகை குழந்தைகளால் வைத்தல்.

12. யாகம் வளர்த்து நவகிரஹ பூஜை, ஈஸ்வர பூஜை செய்தல்.

13. அட்சதை அரிசி சபையில் வினியோகம் செய்தல்.

14. மணமக்கள் திருமண உடை அணிந்து சபைக்கு வருதல்.

15. பெற்றோர்களுக்கு பாதபூஜை மணமக்கள் செய்தல்.

16. சபையோரிடம் மாங்கல்யம் ஆசிர்வாதம் பெறுதல்.

17. மாப்பிள்ளைக்கு பூணூல் கல்யாணம், பிறகு தாரை வார்த்து கொடுத்தல்.

18. மணமகன் மணமகளுக்கு மாங்கல்யம் அணிவித்தல் (கெட்டி மேளம்).

19. தாய் மாமன் பட்டம் மணமகளுக்கு கட்டுதல்.

20. மணமகளின் தம்பி மிஞ்சி அணிவித்தல்.

21. மணமகன் மைத்துனருக்கு பரிசு வழங்குதல்.

22. மணமக்கள் மைத்துனரோடு பொரிபோடுதல்.

23. மணமக்கள் சுற்றி வருதல்.
முதல் சுற்றில் மாலை மாற்றுதல்.
இரண்டாவது சுற்றில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்.
மூன்றாவது சுற்றில் பானையில் சங்கு, மோதிரம், சாவி எடுத்தல்.

24. மணமக்கள் மாறி அமர்ந்தபின் சேஷ அரிசி ஆசிர்வதித்தல்.

25. பாலும் பழமும் கொடுத்தல் அடுத்து ஆரத்தி எடுத்தல்.

**மேலே குறிப்பிட்ட திருமண சடங்குகள் திருமணத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட 1.30 மணி நேரத்தில் முடித்தல்வேண்டும்.**

1. மணமக்களை அழைத்து சென்று திருமண பாயை போட்டு அதில் உட்கார வைத்து பாலும் பழமும் கொடுத்தல்.

2. சோமன் அணிவித்தல்.

**சம்பந்தி மரியாதை :** பெண்ணின் தகப்பனாரும், மாப்பிள்ளையின் தகப்பனாரும் வார ஆலையை பார்த்து உட்கார வைத்து சந்தனம் கொடுத்து கழுத்தில் மாலை போட்டு வெற்றிலை பாக்கு கொடுத்து நமது தொடர்புகள் நீடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ள வேண்டும்.

3. காங்கணம் அவிழ்த்தல்.

(பெண்ணையும், மாப்பிள்ளையும் மணவறையின் கீழ் உட்கார வைத்து ஒரு தாம்பாளத்தில் பால் ஊற்றி கொஞ்சம் சேஷ அரிசி போட்டு வைத்து ஊதுபத்தி காண்பித்து விநாயகர் பூஜை செய்ய வேண்டும். ஒரு பாத்திரத்தில் பச்சரிசி, தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து அதை மாப்பிள்ளை அள்ளிக் கொண்ட பிறகு பெண் கங்கணத்தை கழற்றி தாம்பாளத்தில் போட வேண்டும். பெண்ணும் அதேபோல் பச்சரிசி, தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து அதை பெண் அள்ளிக் கொண்ட பிறகு மாப்பிள்ளை கங்கணத்தை கழற்றி தாம்பாளத்தில் போட வேண்டும். கற்பூரம் கங்கணத்திற்கும், விநாயகருக்கும் காட்டி கும்பிடவேண்டும். ஈசான மூலையில் உள்ள பானையை பெண் இடுப்பில் வைத்துக் கொண்டு மாப்பிள்ளையும் பெண்ணும் அரசாணி காலை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுக்க வேண்டும். பானை, அரசாணைக்கால், முகூர்த்தபாய் மாப்பிள்ளை வீட்டுக்கு எடுத்துசெல்ல வேண்டும். அரசாணைக்கால் வீட்டு தோட்டத்தில் நட்டு பானையில் உள்ள தண்ணீரை ஊற்ற வேண்டும்).

## திருமணத்திற்கு அய்யருக்கு வாங்க வேண்டிய சாமான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மஞ்சள் தூள் | – | ரூ. 2.00 |
| 2. | சந்தனம் | – | ரூ. 2.00 |
| 3. | பூ | – | 5 முழம் |
| 4. | குங்குமம் | – | ரூ. 100 |
| 5. | கற்பூரம் | – | ரூ. 2.00 |
| 6. | சாம்பிராணி | – | ரூ. 2.00 |
| 7. | ஊதுபத்தி | – | 1 பாக்கட் |
| 8. | குண்டு மஞ்சள் பலகை | – | 9 |
| 9. | வெரலி மஞ்சள் | – | 9 |
| 10. | வெற்றிலை | – | 1/2 கவுளி |
| 11. | பாக்கு | – | 20 |
| 12. | அச்சு வெல்லம் | – | 100 கிராம் |
| 13. | முத்து பவலம் | – | 1 செட் |
| 14. | கற்கண்டு | – | 50 கிராம் |
| 15. | நெய் | – | 50 கிராம் |
| 16. | நூல்கண்டு | – | 1 |
| 17. | காவி அரைத்தது | – | 0.50 பைசா |
| 18. | திரி நூல் | – | ரூ.2.00 |
| 19. | வாழைப்பழம் | – | 10 |
| 20. | வாழை இலை | – | 9 |
| 21. | எலுமிச்சம்பழம் | – | 5 |
| 22. | தேங்காய் | – | 5 |
| 23. | இரும்பு ஒடுக்கு | – | 2 |
| 24. | கருப்பு கயிறு | – | 1 மீட்டர் |
| 25. | பெரம்பு எழுத்தாணி (மூங்கில் குச்சி) | – | 2அடி நீளம் |
| 26. | நல்லெண்னை | – | 25 கிராம் |
| 27. | சீயக்காய் | – | 1 பாக்கட் (சிறியது) |
| 28. | பசும்பால் | – | 200 மீ. லிட்டர் |
| 29. | கோமியம் | – | 1/2 டம்பளர் |
| 30. | நெல்பொரி | – | 1/2 படி |
| 31. | நெல் | – | 1படி |
| 32. | அரிசி | – | 5 கிலோ |
| 33. | ஒதியங்கால் | – | 1 |
| 34. | இணைகால் | – | 1 |
| 35. | பாலிகை முளை | | |
| 36. | சாலுங்கரஹம் வகையரா | | |
| | சின்ன பானை | – | 4 |
| | பெரிய பானை | – | 2 |
| | மூக்கு வைத்த கலையம் | – | 1 |
| | நவதானியம் வைக்கும் பிண்டம் | – | 5 |
| 37. | மடத்து மாலை | – | 2 (முன்பக்கம் திறந்த மாலை) |
| 38. | ஒரு முழம் மல்லிகை பூ மாலை | – | 2 |
| 39. | கல்யாண மாலை | – | 2 |
| 40. | பூச்செண்டு | – | 2 |
| 41. | பூ | – | 100 முழம் |

| | | | |
|---|---|---|---|
| 42. | பச்சை நெல் உமி | – | 1 கிலோ |
| 43. | அருகம்புல் | | |
| 44. | சமத்து வகையறா | | |
| 45. | காலுக்கு வஸ்த்திரம் | – | 1/2 மீட்டர் (சிகப்பு துணி) |
| 46. | கும்பத்திற்கு மஞ்கள் துணி | – | 75 செ.மீ (ஜாக்கட் துணி) |
| 47. | அய்யருக்கு வேட்டி | – | 8 முழம் |
| | துண்டு | – | 4 முழம் |
| 48. | கலசம் வைப்பதற்கு | – | 1 சின்ன பித்தளை சொம்பு |
| 49. | நலுங்கு பாய் | – | 1 |
| 50. | பட்டு பாய் | – | 1 |
| 51. | மகுடதோரணம் | – | 1 |
| 52. | தர்பை, மாயிலை | | |
| 53. | ஆயிரம் பெருந்தாளி | – | 1 |
| 54. | குத்து விளக்கு | – | 2 |
| 55. | சொம்பு | – | 1 |
| 56. | லோட்டா | – | 1 |
| 57. | வெண்கல சட்டி | – | 1 |
| 58. | சின்ன பித்தளை தாம்பூலம் | – | 1 |
| 59. | பெரிய தாம்பூலம் | – | 2 |
| 60. | தூவக்கல் | – | 1 |
| 61. | சந்தன பேலா | – | 1 |
| 62. | பெரப்பங்கூடை | – | 1 |
| 63. | பசுஞ்சாணி | | |
| 64. | புது செங்கல் | – | 1 |
| 65. | முக்காலி | – | 1 |
| 66. | மணல் கொஞ்சம் | | |
| 67. | பாலாடை | – | 1 |
| 68. | தீப்பெட்டி | – | 1 |
| 69. | வெட்டறுவாள் | – | 1 |
| 70. | பலகுகட்டை | – | 1 |
| 71. | பாலிகை முளை | – | 1 |

நவதாணியம் வாங்கி 5 நாள் அல்லது 7 நாள் முன்னதாக ஒரு தாம்பூலத்தில் மணல் போட்டு முதல்நாள் இரவு நவதாணியத்தை ஊறபோட்டு காலை எடுத்து அரை லிட்டர் பாலில் போட்டு நவதானியத்தை தெளித்து சாம்பிராணி போட வேண்டும். அதை காலையும் மாலையும் சாம்பிராணி போட வேண்டும்.

முதல் நாள் பெண் அழைத்து வர கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் விவரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | குண்டு மஞ்சள் | – | 9 |
| 2. | குங்குமம் | – | 1 டப்பா |
| 3. | சந்தனம் | – | ரூ. 2.00 |
| 4. | தேங்காய் (மஞ்சள் துடைத்து) | – | 5 |
| 5. | வாழைப்பழம் | – | 3 சீப்பு |
| 6. | வெற்றிலை | – | 1 கவுளி |
| 7. | பாக்கு | – | 10 |
| 8. | பூ | – | 10 முழம் |
| 9. | ராக்குடி ஆரம் (ஜடைப்பட்டி) | – | 1 |

முதல் நாள் மாப்பிள்ளை அழைத்து வர கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | குண்டு மஞ்சள் | – | 9 |
| 2. | குங்குமம் | – | 1 டப்பா |
| 3. | சந்தனம் | – | ரூ. 2.00 |
| 4. | தேங்காய் (மஞ்சள் துடைத்து) | – | 5 |
| 5. | வாழைப்பழம் | – | 3 சீப்பு |
| 6. | வெற்றிலை | – | 1 கவுளி |
| 7. | பாக்கு | – | 10 |
| 8. | பூ | – | 10 முழம் |
| 9. | எலுமிச்சம் பழம் | – | 2 |

கோயிலிலிருந்து திருமண மண்டபத்திற்கு பெண் அழைப்பு பொருள்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜமக்காளம் | – | 3 |
| 2. | சந்தன பேலா | – | 1 |
| 3. | சந்தனம் | – | 2.00 ரூபாய் |
| 4. | வெற்றிலை | – | 2 கவுளி |
| 5. | அஜந்தா பாக்கு | – | 100 |
| 6. | பெண் அழைப்பு மாலை | – | 1 |
| 7. | பூச்செண்டு | – | 1 |
| 8. | பூ | – | 25 முழம் |
| 9. | குங்கும சிமிழ் | – | 1 |
| 10. | பெரப்பன் கூடை | – | 1 |
| 11. | தாம்பாலம் (தேவையானவை) | – | 3 |

அர்ச்சனை பொருட்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | தேங்காய் | – | 1 |
| 2. | வாழைப்பழம் | – | 2 |
| 3. | கற்பூரம் | – | 1.00 ரூபாய் |
| 4. | அய்யருக்கு | – | 5.00 ரூபாய் |
| 5. | வெற்றிலை பாக்கு | | |
| 6. | பூ | | |

திருமண மண்டப வாசலில் குத்து விளக்கு ஏற்றி வைத்து அச்சதை போடவேண்டும். ஆர்த்தி எடுக்க வேண்டும்.